முருகப்பெருமான் துணை

**மகான் இராமானந்தர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.10.2022, ஞாயிற்றுக்கிழமை

1. தவயோக ஆறுமுக அரங்கனே
தன்னார்வ தொண்டு வளர்த்து
அவனி காக்க அவதாரம் புரிந்த
அண்ணலே ஞான தேசிகனே
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் சுபகிருது தரிவை திங்கள்
ஆசிபட மூவைதிகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15ம் நாள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை)
அறிவிப்பேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை இராமானந்தர் யானும்
அருளுவேன் உலகநலம் பெற
ஆசிதனை அரங்கன் திருவடி
அகிலத்தார் பற்றி வருதல்காண
4. காணவே நல்ல தேற்றமும்
கந்தவேலன் அனுகிரகமிக்க
ஞானமாக நல்ல மாற்றமாக
ஞாலமதில் உலகோர் சடுதிகண்டு
5. கண்டுமே அரங்கன் தேடலின்
கண்ணியமிக்க ஞானிகளாக
தொண்டுவழி உலகோர் உயர்வர்
தெரிவிப்பேன் ஞானிகள் பூசை
6. பூசைதனை கலியுக மக்கள்
புண்ணியபலமோடு செய்துமே
ஆசிதனை அரங்கமகானிடம்
ஆற்றல்மிக்க தீட்சையாக ஏற்று
7. ஏற்றுமே தொடர்ந்து வர
எல்லா வகையும் வரம்கூடி
மாற்றம்தனை உலகோர் அடைவர்
மகத்துவம் தரும் அன்னதான சேவை
8. சேவைதனை கலியுக மக்கள்
சிறப்புற செய்து வருக
அவனியில் தரும பலம்தானும்
அளவிலா சக்தியாகப் பெருகி
9. பெருகியே உலகம் எங்கிலும்
பெருமை மிக்க ஞானமாற்றம்
குருவரங்கனின் பரிபூரண ஆசியாக
குருபரனின் சக்தியாக வெளிப்பட்டு

10. வெளிப்பட்டு உலகம் எங்கிலும்
வெளிப்படையான தருமவான்கள்
அழிவிலா சக்தி ஆற்றலாக
அறிவிப்பேன் பரவி இனிதே

11. இனிதே ஞான ஆட்சிதனை
இந்த உலகம் கண்டுயரும்
கனிவேலவன் தலைமை அமையும்
கண்டுரைத்த அனுகூல ஆசி முற்றே

–சுபம்–